நாள்.12.12.2024

**அசல் வழக்கு எண். 9/2018**

பெயர் – அறிவரசி

க/பெ – முருகராஜ்

<u>பி.வாசா.2– வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் தாக்கல் செய்த அறிக்கை நி.ம.சா.ஆ.1 , நி.ம.சா.ஆ 2 மாதிரிவரைபடம் என்றால் சரிதான். மாதிரிவரைபடத்தில் AF என்பது வழக்கு சொத்தில் வடபுறத்தில் எல்லையாக உள்ள கிழமேல் சுவர் என்றால் சரிதான். அந்த சுவர் கீழ்புறம் Fல் முடிந்து G வரை காம்பொண்ட் சுவர் உள்ளது என்றால் ஆமாம். அந்த காம்பொண்ட் சுவர் பழமையானது என்றால் சரிதான். G யிலிருந்து மேற்குநோக்கு J வரை செல்லும் பகுதியில் கம்பி வலை வேலி உள்ளது என்றால் ஆமாம். அந்த கம்பி வேலி மையத்தில் தென்புறமாக போவதற்கு பாதை உள்ளது என்றால் ஆமாம். J யிலிருந்து K என்பது வடபுறம் நோக்கி போகும் லைன் என்றால் சரிதான் ஒரே லைன் தான் J யிலிருந்து 1 அடிக்கு பழைய சுவர் அதை தொடர்ந்து கேட் உள்ளது. AF சுவரில் மேல்பாதியில் பிரதிவாதி வீட்டின் தென்புற தாய் சுவர் உள்ளது என்றால் சரிதான். AF இடையில் எந்த வழியும் கிடையாது என்றால் ஆமாம். வழக்கு சொத்திற்கு வருவதாக இருந்தார் JK வழியாக மற்றும் HI வழியாகதான் வரமுடியும் வேறு வழி கிடையாது என்றால் ஆமாம். நான் வழக்குரை மற்றும் எதிர்வழக்குரையை படித்து பார்த்தேனா என்றால் வழக்குரை படித்து பார்த்தேன். எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை. AF JK பகுதிதான் வாதிகள் உரிமை கோரும் இடம் என்று தெரிந்துக்கொண்டேன் என்றால் ஆமாம் வழக்குரை படித்து தெரிந்துக்கொண்டேன். 2வது முறையாக நான் வழக்கு சொத்தை கடந்த 13.07.2019 அன்று பார்வையிட்டேன். நான் மீண்டும் பார்வையிட வேண்டும் என்று நியமன மனு கொடுத்தது பிரதிவாதி தரப்பு என்றால் ஆமாம். நான் நியமணம் செய்யப்பட்ட தேதி 06.07.2018 என்றால் ஆமாம். அன்றை தினம் எதிர்வாதி நீதிமன்றத்தில் ஒருதலைபட்சமாக்கப்பட்டவர் என்றால் ஆமாம். ஆனால்எதிர்வாதி தாக்கல் செய்த வழக்கறிஞர் மனு அனுமதிக்கப்பட்டது என்றால் சரிதான். நான் 30.08.2019ல் தான் 2வது வழக்கறிஞர் ஆணையத்தின்பேரில் அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். Aலிருந்து கிழக்கில் 1 அடி தூரத்தில் 2 அடி இரும்பு

கேட் சுவரை உடைத்து போட்டுள்ளார்கள் என்றால் ஆமாம். அந்த இடத்திற்கு தென்புறத்தில்தான் 1–3/4 அடி தூரத்தில் பிரதிவாதி புதிதாக கட்டிய செப்டிக்டேங் உள்ளது என்றால் ஆமாம். 30.08.2019ல் நான் எனது முதன்மை சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் ஆமாம். புல எண்.317/6 ஐ – 40 உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அந்த உட்பிரிவுகள் அனைத்தும் அளக்கமுடியாத நிலையில் உள்ளது என்றால் ஆமாம். எனது சாட்சியத்தில் புல எண்.317/6 என்பது யாருக்கு சொந்தமானது என்றால் நான் ஆவணங்களை பார்க்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் ஆமாம். அது பிரதிவாதிக்கு சொந்தமானது என்றும் சாட்சியம் அளித்துள்ளேன் இதில் எது சரியானது என்றால் புல எண்.317/6 ஐ பொறுத்து நான் ஆவணங்களை பார்க்கவில்லை என சொன்னது சரிதான். ஆனால் பிரதிவாதியின் வீடு அங்குதான் உள்ளது. AF ன் வடபுறத்தில் பிரதிவாதி வீடு உள்ளதா அல்லது தென்புறத்தில் உள்ளதா என்றால் வடபுறத்தில்தான் உள்ளது. வடபுறத்தில் இருப்பது புல எண்.317/6 மற்றும் தென்புறத்தில் புல எண்.316/1 என்றால் சரிதான். வாதி தரப்பில், பிரதிவாதிகளுக்கு சொந்தமான புல எண்.317/6 ம் பத்திரம் படி அளக்குமாறு ஆவணங்களை என்னிடம் ஒப்படைத்தார் என்றால் ஆமாம். ஆனால் எனக்கு கொடுக்கப்பட்ட வாரண்டில் குறிப்பிடாததால் நான் அளக்கவில்லை என்றால் சரிதான். பிரதிவாதியின் ஆவணங்களையும் பார்த்து அளந்திருந்தால் உண்மையான விஸ்திரணம் கண்டிருக்கலாம் என்றால் சரியல்ல.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதிற்கிணங்க நீதிமன்ற அனுமதியின்பேரில் பிரதிவாதிதரப்பில் மறு விசாரணை.</u>**

நான் தாக்கல் செய்த அறிக்கையில் AF இடையில் பிரதிவாதியின் தாய் சுவர் எதோடு முடிகிறது என்றால் அது தெரியாது, A முதல் F வரை பிரதிவாதியின் தாய்சுவர் ஒட்டி வருகிறது. என் அறிக்கையில் நான் குறிப்பிட்டுள்ள 1,2,3 என்ன என்றால் பிரதிவாதி வீட்டு ஜன்னல். பிரதிவாதியின் வீட்டின் தாய் சுவர் காபொண்ட் சுவற்றின் மீது கட்டப்பட்ட தாய் சுவரா என்றால் இல்லை. Aமுதல் B வரை காபொண்ட்டின் மீது தாய் சுவர் கட்டப்படவில்லை என்றால் ஆமாம். B முதல் F வரை ஒரே சுவர்தான் என்றால் ஆமாம். அது காபொண்ட் சுவர். A முதல் F வரை உள்ள வடபுறம் பிரதிவாதிகளின் புல எண் 317/6 என்று நான் சொல்லியுள்ளேன் என்றால்

ஆமாம். A முதல் F வரை உள்ள சுவற்றின் தென்புறத்தில் மேல்புறத்தில் ஒரு முக்கோண பகுதி புல எண் 317/6 ல் வருகிறது என்றால் ஆமாம். அதை 2வது முறை அளந்தபோதுதான் தெரியவந்தது என்றால் ஆமாம். அந்த முக்கோண பகுதியில்தான் பிரதிவாதிகள் கட்டிய செப்டிக்டேங் உள்ளது என்றால் ஆமாம்.

**மறுவிசாரணை இல்லை.**

*Taken down by the typist to my dictation in open Court read over to the witness admitted and acknowledged* ***by him/her to be Correct.***

Sd/.Tmt.S.Kavipriya,B.A.L.L.B.,

District Munsif, Pattukkottai.